மயிலாடும்பாறை கிராமத்தில்

வேளாண்துறை குடியிருப்பு கட்டிடம் சீரமைக்கப்படுமா?

பொதுமக்கள் எதிர்பார்ப்பு

வருசநாடு, நவ. 24: மயிலாடும்பாறை கிராமத்தில் வேளாண்துறை குடியிருப்பு கட்டிடம் சீரமைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மயிலாடும்பாறை கிராமத்தில் வேளாண்த்துறை குடியிருப்பு கட்டிடம் மற்றும் தோட்டக்கலைத் துறை குடியிருப்பு கட்டிடம் பாழடைந்து சமூக விரோதிகளின் கூடாரமாக மாறி வருகிறது. இதனால், பொதுமக்கள் அப்பகுதியில் மிகவும் அச்சத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். இதனால் வேளாண்மைதுறை, தோட்டக்கலை துறை அதிகாரிகளுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட குடியிருப்பு கட்டிடம் பாழடைந்து நிதியும் வீணடிக்கப்பட்டு வருகிறது. இது சம்பந்தமாக மயிலாடும்பாறை விவசாயிகள் மிகவும் கவலைக்கிடமாக உள்ளன. மேலும் அரசு பணமும் வீணடிக்கப்பட்டு வருகிறது. மயிலாடும்பாறை வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு பின் பகுதியில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இந்த தோட்டக்கலைத்துறை கட்டிடம் மற்றும் வேளாண்துறை கட்டிடம் உதாரணமாக திகழ்கிறது. இதுகுறித்து மயிலாடும்பாறை கிராமவாசிகள் கூறுகையில், "பல ஆண்டு காலமாக கட்டி முடிக்கப்பட்டு அரசு பணம் வீணடிக்கப்பட்டு வருகிறது இதற்கு தேனி மாவட்ட கலெக்டர் உரிய நடவடிக்கை எடுத்து தோட்டக்கலை துறை மற்றும் வேளாண்துறை அதிகாரிகளை இக்கட்டிடங்களில் தங்குவதற்கு உத்தரவு போட வேண்டும்" என்றனர்.

கடமலைக்குண்டு அருகே

குப்பைக்கழிவுகளை எரிப்பதால் காற்று மாசுபாடு

வருசநாடு, நவ. 24: கடமலைக்குண்டு அருகே குமணன்தொழு கிராமம் செல்லும் சாலை பகுதிகளில் தினந்தோறும் கடமலைக்குண்டு ஊராட்சிக்கு சொந்தமான குப்பை கழிவுகளை தீ வைத்து எரிப்பதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசி சிரமப்பட்டு வருவதாக பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

கடமலைக்குண்டு ஊராட்சி சார்பில் குமணந்தொழு செல்லும் சாலையில் குப்பைத்தொட்டி அமைத்து தினந்தோறும் வரக்கூடிய கழிவுகளை டிராக்டர் மற்றும் லாரிகள் மூலமாக கொட்டப்பட்டு வருகிறது.

இந்தக் குப்பைக் கழிவுகளை தினந்தோறும் தீ மூட்டுவதால் அதில் வரும் புகையால் ரோட்டில் வழியாக செல்லக்கூடிய வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் சுவாசிக்க முடியாமலும் வாகனங்களை ஓட்டிச் செல்ல முடியாமலும் கடும் அவதிப்பட்டு வருகின்றனர். இது தொடர்பாக அப்பகுதியாக செல்லக்கூடிய பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் சார்பில் மாவட்ட நிர்வாகத்திடம் புகார் தெரிவித்தும், இதுவரை நடவடிக்கை இல்லை என இப்பகுதி மக்களின் நலன் கருதி குப்பை கொட்டக்கூடிய இடங்களில் சுற்றுச்சுவர் அமைத்தும், மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என தனித்தனியாக பிரிக்கப்பட்டு அவற்றை முறையாக மக்கள் நடமாட்டம் இல்லாத நேரங்களில் தீ மூட்ட வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மதுபாட்டில்கள் பறிமுதல்

போடி, நவ. 24: போடி புறநகர் காவல் நிலைய எஸ்ஐ விஜய் அந்தப்பகுதியில் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது, நாகலாபுரம் பகுதியில் பிள்ளையார் கோவில் தெருவை சேர்ந்த ஜெயபிரகாஷ் மனைவி வெள்ளையம்மாள் (53) என்பவர் அனுமதியின்றி சட்ட விரோதமாக மது பாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்தது தெரியவந்தது. அவரை போலீசார் கைதுசெய்தனர். மேலும் அவரிடம் இருந்து 6 மது பாட்டில்களை பறிமுதல் செய்தனர்.

▶ ஆண்டிபட்டி அருகே உள்ள வைகை அணை 5 மாவட்டங்களின் முக்கிய நீராதாரமாக விளங்குகிறது. நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழையின் அளவு குறைந்து வருவதால் அணைக்கான நீர்வரத்தும் குறைந்து வருகிறது. ஆனாலும், பரந்து விரிந்து கடல் போல் வைகை அணை பிரமாண்டமாக காட்சியளிக்கிறது.

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லை

வைகை அணை நீர்மட்டம் சரிவு

ஆண்டிபட்டி, நவ. 24: தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே உள்ள 71 அடி உயரம் கொண்ட வைகை அணை தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட ஐந்து மாவட்ட மக்களின் விவசாயத்திற்கும் குடிநீருக்கும் முக்கிய பங்களிக்கிறது. இந்த வைகை அணையின் நீர்மட்டம் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு 66 அடிக்கு மேல் உயர்ந்து இருந்ததால் முதல் போகம் மற்றும் ஒரு போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது.

அதன் பின்னர் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த பலத்த மழையின் காரணமாக அணையின் நீர்மட்டம் அதன் முழு கொள்ளளவை எட்டியது. பின்னர் விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு ஏற்ப வைகை அணையின் பூர்வீக பாசன பகுதிகளான மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்ட குடிநீர் தேவைகளுக்காகவும் பாசனம் மற்றும் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்து வது வகையில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. மேலும் உசிலம்பட்டி வட்டார கண்மாய்களை நிரப்பு வகையில் 58ம் கால்வாய் பகுதியில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணையில் இருந்து பல்வேறு பகுதிகளுக்கு அதிகப்படியான தண்ணீர் திறந்து விடப்பட்ட காரணத்தினாலும், அணையின் நீர் பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் நீர்வரத்து குறைந்த காரணத்தினாலும் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து கிடுகிடுவென குறைந்து கொண்டே வந்தது.

பின்னர் அணையில் இருந்து வைகை அணை பூர்வீக பாசன பகுதி, முதல் போகம் மற்றும் ஒரு போக பாசனம், 58ம் கால்வாய் பகுதி உள்ளிட்ட பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விடப்படுவது நிறுத்தப்பட்டது. நேற்று வரை இரண்டாம் போகமற்றும் ஒருபோக பாசனத்திற்காக திறந்து விடப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டு, தற்போது அணையில் இருந்து இரண்டாம் போக பாசன பகுதிகளுக்காக முறை பாசனத்தின் படி அணையிலிருந்து 700 கன அடி தண்ணீரும், குடிநீருக்காக 69 கன அடி தண்ணீரும் என மொத்தம் 769 கன அடி தண்ணீர் மட்டும் வெளியேற்றப்பட்டு வருகிறது. மேலும் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் போதிய மழை இல்லாத காரணத்தினால் அணைக்கு நீர்வரத்து வெறும் 100 கன அடி மட்டுமே வந்து கொண்டிருக்கிறது. அணைக்கு நீர்வரத்து அடியோடு குறைந்து விட்ட காரணத்தால் அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 61.19 அடியாக குறைந்து காணப்பட்டது. மேலும் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து கொண்டே வருவதால் ஐந்து மாவட்ட விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மூணாறு சாலைகளில்

ரெப்ளக்டர் அமைக்க கோரிக்கை

மூணாறு, நவ. 24: கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் உள்ள மூணாறு மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில தினங்களாக தொடர் மழை பெய்து வருகிறது. காலை, மாலை வேளைகளில் மழை பெய்தவுடன் கடும் மஞ்சி மூட்டம் நிலவுகிறது. இதனால், சாலைகளில் பாதை தெரியாமல் வாகன ஓட்டிகள் அவதிப்படுகின்றனர். குறிப்பாக மூணாறு முதல் பள்ளிவாசல் இரண்டாம் மைல் வரை, அதிக மஞ்சி மூட்டம் நிலவுகிறது. கொச்சி-தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலைகளில் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு மஞ்சி மூட்டத்தை காண்பது இன்ப அனுபவமாக இருந்தாலும், வாகன ஓட்டிகள் அவதிப்படுகின்றனர். இரண்டாம் மைல் முதல் ஹெட் ஒர்க்ஸ் அணை வரை சுமார் 5 கி.மீ தூரத்திற்கு மஞ்சி மூட்டத்தால் வாகனங்கள் ஊர்ந்து செல்கின்றன. இந்த பகுதிகளில் அதிக வளைவுகள் உள்ளன. எதிரே வருகிற வாகனங்கள் அருகில் வந்தால் மட்டுமே காண முடிகிறது. இது மட்டுமல்லாமல் சாலைகளில் பல இடங்களில் குண்டும், குழியுமாக இருப்பதால், அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன.

தற்போது கேரளத்தில் ஓணப்பண்டிகைகளைகட்டியுள்ளது. இதனால், சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகமாக இருக்கும்; வாகனப் போக்குவரத்தும் அதிகமாக இருக்கும். இதனால், சாலைகளின் இருபுறமும் ரெப்ளக்டர் அமைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு சுற்றுலாப் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

டூவீலர்கள் மோதல்

நத்தம், நவ.24: நத்தம் அருகே இலுப்பபட்டியை சேர்ந்தவர் சுப்பிரமணி (38). தொழிலாளி. இவர் நேற்று தனது டூவீலரில், செந்துறைக்கு சென்று விட்டு மீண்டும் ஊருக்கு திரும்பி கொண்டிருந்தார். மங்களப்பட்டி பிரிவு பகுதியில் வந்து கொண்டிருந்தபோது எதிரே செந்துறையை சேர்ந்த சிவா (21) என்பவர் ஓட்டி வந்த டூவீலர் மோதியது. இதில் சுப்பிரமணிக்கு பலத்த காயம் ஏற்பட்டது. ஆபத்தான நிலையில் கிடந்த அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு நத்தம் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர். பின்னர் அவர் மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து நத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

விதிமீறிய வாகனங்களுக்கு ரூ.1.05 லட்சம் அபராதம்

ஒட்டன்சத்திரம், நவ.24: ஒட்டன்சத்திரத்தில் போக்குவரத்து விதிகளை மீறிய வாகன உரிமையாளர்களுக்கு ரூ.1.05 லட்சம் அபாரதம் விதிக்கப்பட்டது. மேலும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பேருந்துகளில் பொருத்தப்பட்டிருந்த ஏர் ஹாரன்களும் பறிமுதல் செய்யப்பட்டது.

ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கு மிகுந்த இடையூறு ஏற்படுத்தும் விதமாக ஏர்ஹாரன்கள் பயன்பாடு அதிக அளவில் இருப்பதாக தினகரன் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இதனையடுத்து மதுரை சரக இணை போக்குவரத்து ஆணையாளர் சந்திரசேகரன் உத்தரவின் பேரில், பழநி வட்டார போக்குவரத்து அலுவலர் ஸ்ரீதரன், ஒட்டன்சத்திரம் வட்டார போக்குவரத்து அலுவலர் ஈஸ்வரன் உள்ளிட்ட அதிகாரிகள் நேரடி ஆய்வில் ஈடுபட்டனர். அதில், ஏர்ஹாரன் பயன்படுத்திய பேருந்துகள், அதிக பாரங்களை ஏற்றிச் சென்ற சரக்கு வாகனங்கள், காப்புரிமை இல்லாத வாகனங்கள், ஓட்டுநர் உரிமம் மற்றும் தகுதிச் சான்று இல்லாத வாகன ஓட்டுநர்கள் உள்ளிட்டவை குறித்து சோதனையில் ஈடுபட்டனர். அதில் விதிமுறைகள் மீறிய சரக்கு வாகனங்கள் மற்றும் பேருந்துகளுக்கு ரூ.1.05 லட்சம் அபராதம் விதித்து ஏர்ஹாரன்களை பறிமுதல் செய்து எச்சரிக்கை செய்தனர்.

கடையை உடைத்து பணம் திருட்டு

திண்டுக்கல், நவ.24: திண்டுக்கல் அருகே அனுமந்த நகரை சேர்ந்தவர் லால் பகதூர் (37). இவர் அனுமந்த நகர் மெயின் ரோட்டில் மெடிக்கல் கடை நடத்தி வருகிறார்.

இவர், நேற்று முன் தினம் இரவு வழக்கம் போல் வியாபாரம் முடித்துவிட்டு கடையை பூட்டி விட்டு சென்றார். இந்நிலையில் நேற்று காலை, கடையின் பூட்டு உடைக்கப்பட்டு இருப்பதாக அந்த வழியாக சென்றவர்கள் லால் பகதூருக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து அவர் உடனடியாக கடைக்கு வந்து பார்த்ததில், கடையின் பணப் பெட்டியில் வைத்திருந்த ரூ.15 ஆயிரம் பணத்தை மர்ம நபர்கள் திருடி சென்றது தெரிய வந்தது. இது குறித்து திண்டுக்கல் தாலுகா போலீசாருக்கு அவர் தகவல் தெரிவித்தார். அதன் பேரில் தாலுகா போலீஸ் இன்ஸ்பெக்டர் பாலமுருகன் தலைமையில், சப்-இன்ஸ்பெக்டர்கள் கிருஷ்ணவேணி, அங்கமுத்து, சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் அரியவேல் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர். மேலும் இது குறித்து தாலுகா போலீசார் வழக்கு பதிவு செய்து, அந்த பகுதிகளில் பொருத்தப்பட்டு இருக்கும் கண்காணிப்பு கேமராக்களின் காட்சிகளை வைத்து பணத்தை திருடி சென்ற மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.

மூணாறு முருகன் கோயிலில்

டிச.3ல் திருக்கார்த்திகை உற்சவம்

மூணாறு, நவ. 24: கேரள மாநிலம் மூணாறில் ஸ்ரீ பிரணவ சுப்பிரமணிய சுவாமி கோயில் உள்ளது. இங்கு பழநி தண்டாயுதபாணி கோயிலில் நடக்கும் பூஜை உள்பட ஐதீகங்கள் தவறாமல் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

அதன்படி ஆண்டுதோறும் கொண்டபடும் கார்த்திகை திருவிழாவை போல், இந்த ஆண்டு டிசம்பர் 3ம் தேதி சிறப்பாக கொண்டாட கோவில் நிர்வாகிகள் தீர்மானித்துள்ளனர். டிச.3ம் தேதி புதன்கிழமை காலை 6 மணி முதல் 7 மணி வரை பழைய மூணாறு பார்வதி அம்மன் கோயிலில் இருந்து சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு காலையில் பால் குடம் எடுத்து வரப்பட்டு முருகன், வள்ளி, தெய்வானைக்கு அபிஷேகம் ஆராதனை நடைபெறும். தொடர்ந்து காலை 7 மணி முதல் 8 மணி வரை தொடர்ந்து சிறப்பு பூஜை, மதியம் 10 மணி முதல் 12 மணி வரை பக்தி பாடல்கள், மாலை 4 மணிக்கு கலை நிகழ்ச்சி, மாலை 6.15 மணிக்கு தீப ஆராதனை, கார்த்திகை ஜோதி ஏற்றுதல், இரவு 8.30 மணிக்கு தேர் ஊர்வலம் ஆகியவை நடைபெறும். அன்று காலை 10 மணி முதல் கோயிலில் அன்னதானம் வழங்கப்படும் என்று மூணாறு கோயில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

pnb Housing Finance Limited — பதிவு அலுவலகம்: 9வது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கே.ஜி. மார்க், புதுடெல்லி-110001 தொலைபேசிகள்: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com கிளை முகவரி: கோயம்புத்தூர் மையம், நோபல் சென்டர், முதல் தளம், லக்ஷ்மி மில் ஜங்ஷன், மின் பாளையம், கோயம்புத்தூர்-641037.

கோரிக்கை அறிவிப்பு

நாளது தேதிய திருத்தப்படி கடனீட்டுக் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3(1) உடன், பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுக் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 இன் அத்தியாயம் III இன் பிரிவு 13(2) கீழ் அறிவிப்பு, நாங்கள், **பின்னபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்** இனிமேல் **'பின்னபிஎச்எல்'** ஆக குறிப்பிடப்படும்) பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுக் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (இனிமேல் "சட்டம்" ஆக குறிப்பிடப்படும்) இன் அத்தியாயம் III இன் பிரிவு 13(2) கீழ் கோரிக்கை அறிவிப்பு வழங்கியிருந்தோம். தவணைகள்/வட்டி செலுத்தப்படாத காரணத்தால் இந்திய ரிசர்வ் வங்கி/ தேசிய வீட்டுக்கடன் ஒழுங்காற்று வாரியம் வழிகாட்டுதல்களின்படி உங்கள் கணக்கு செயல்படா (NPA) சொத்துகள் ஆக வகைப்படுத்தப்பட்டிருப்பதால் கீழே குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்/ ஜாமின்தாரர்கள் ஆகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் அதிகாரப்பூர்வ அதிகாரி மூலம் மேற்கூறிய கோரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்டது. ஆனால் உள்ளடங்கங்கள் ஆனது அசல், வட்டி ஏனைய தவணைகளைச் செலுத்துவதில் நீங்கள் பொறுப்பு தவறியிருக்கிறீர்கள். நிலுவைத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்கொண்டு, காரணங்களால், நீங்கள் கோரிக்கை அறிவிப்பு பெறுவதைத் தவிர்ப்பதாக நாங்கள் நம்புகிறோம் எனவே இந்த கோரிக்கை அறிவிப்பு பிரசுரம் மேற்கொண்டிருக்கிறோம் இது மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் தேவைப்படுவதாகவும் ஆகிறது. இதன்மூலம் நீங்கள் இந்த கோரிக்கை அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து 60 நாட்கள் காலத்திற்குள் மேற்கூறிய தொகையை நாளது தேதிய வட்டி மற்றும் கட்டணங்களுடன் பின்னபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்கு செலுத்துமாறு கோரப்படுகிறீர்கள். தவறினால் பின்னபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆனது கடன்தாரர்கள் மற்றும் ஜாமின்தாரர்களின் கடனீட்டுக் சொத்துகளை கவாதீனம் செய்கல் உட்பட அனைத்து அல்லது ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கடனீட்டுக் சொத்துகளுக்கு எதிராக, மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) இன் அனைத்து அல்லது ஏதேனும் விதிமுறைகளின் கீழ் உரிய நடவடிக்கைகள் எடுக்கும். பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுக் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இன் பிரிவு 13 இன் உட்-பிரிவு (8) விதிமுறைகள் உங்கள் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன இதன்கீழ் நீங்கள் பொதுமக்களிடமிருந்து விலைப்பள்ளிகள், ஒப்பந்தப்பள்ளி வரவேற்பதன் மூலமான, பொது ஏலம் மூலம் அல்லது தனி ஒப்பந்தம் மூலம் கடனீட்டுக் சொத்துகள் விற்பனைக்கான அறிவிப்பு பிரசுரமாகும் தேதி வரை மட்டும் பின்னபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்கு ஏற்பட்ட அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவினங்களுடன் சேர்த்து முழு நிலுவைத்தொகையை அளிக்கலாம்/செலுத்தலாம்.

வ. எண்	கிளை	கடன் கணக்கு எண்(கள்)	கடன்தாரர்/ உப-கடன்தாரர்/ ஜாமின்தாரர் பெயர்	அடமான சொத்து(கள்) விவரங்கள்	கோரிக்கை அறிவிப்பு நாள்	நிலுவைத்தொகை
1	மதுரை	HOU/ MDU/ 1119/ 758386	திருமதி கல்யாணி R க/பெ திரு. பால் கருப்பசாமி & திரு. பால் கருப்பசாமி த/பெ. திரு. கருப்பசாமி (1)42 கிருபை இல்லம், கிருஷ்ணா நகர், ஊஞ்சாம்பட்டி –தேனி, தமிழ்நாடு – 625531. (2) எண் 224 காரக்குறிச்சியார் தெரு, கழுகுமலை – தூத்துக்குடி, TN–628552. (3) **தேனி மேலப்பேட்டை இந்து நாடார்,** உறவின்முறை மெட்ரிக் HR Sec பள்ளி, HOD தமிழ் துறை, காமராஜர் நகர், முத்துதேவன்பட்டி, தேனி, TN–625534. (4) பிளாட் எண் 42, எஸ் எண் 827,825, கிருஷ்ணா நகர், ஊஞ்சாம்பட்டி, கிராமம், ஊராட்சி, தேனி, தமிழ்நாடு– 625531. (5) **பாலசங்க பேட்டரி பிரிவு,** ஸ்டோர் அட்மின், பெரியகுளம் ரோடு, எதிரில் சந்தை கேட், ஸ்டேட் வங்கி அருகில், தேனி, டீன்– 625531	(i) சர்வே எண்கள். 827, 825 வருவாய் பதிவேட்டின்படி சர்வே எண்.825, 827 (ii) மொத்த பரப்பு 1750 ச.அடி. மனை எண். 42 சொத்து வரி ரசீதின்படி கதவு எண். W9/288/42 (iii) இடம், கிராமம், நகரம், பதிவு, சார்வு பதிவு உள்ளிட்ட விவரங்கள்: உஞ்சாம்பட்டி கிராமம், பெரியகுளம் பதிவு மாவட்டம், தேனி மாவட்டம், தேனி சார் பதிவு அலுவலகம் "கிருஷ்ணா நகர்" (iv) கட்டடத்துடன் கூடிய 1750 ச.அடி நிலத்தின் எல்லைகள்: வடக்கு: 7 மீட்டர் அகல சாலை, தெற்கு: மனை எண்.47 காலி மனை, கிழக்கு: மனை எண்.41 காலி மனை, மேற்கு: மனை எண்.43 காலி மனை. அளவீடு: வடகிழக்கில் மேற்காக 35 அடி. கிழக்கு தெற்காக வடக்கில் 50 அடி, தென்கிழக்காக மேற்கில் 35 அடி, மேற்கு தெற்காக வடக்கில் 50 அடியுடன் நடைபாதை மற்றும் அனைத்து பயன்பாட்டு உரிமைகளுடன் கூடிய பரப்பு 1750 ச.அடி	11/11/ 2025	11.11.2025 தேதியின்படி ரூ. 22,32,556.45 (ரூபாய் இருபத்திரண்டு லட்சத்து முப்பத்திரண்டாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்தாறு மற்றும் நாற்பத்தைந்து பைசா மட்டும்)

நாள்:- 20.11.2025 இடம்:- தேனி — ஒம்/-அதிகாரப்பூர்வ அதிகாரி, பின்னபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் — பதிவு அலுவலகம்: 6வது தளம், B கட்டடம், கங்கா ட்ரூனோ, லோஹெகோன், புனே, மகாராஷ்டிரா 411014. கிளை அலுவலகம் அலகு: எண் 1510, 2ஆவது தளம், ஸ்ரீ காம்பிளக்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு-641018. — **மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு** சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர் / உப-கடன்தாரர் / அடமானதாரர்(கள்) / ஜாமின்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது **க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்** (இதற்குப்பிறகு "கடனீட்டு கடனீந்தோர்" என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், பிரிவு 13(12)–ன் படியும், கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 & 9–ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே **உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 26.12.2025** அன்று மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன்மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்–ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள இணையப்பில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள GHFL's/ கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com–ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த விண்ணங்கள்/ நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	**கடன் எண்:** HL00494100000005015438 முருகன் P (கடன்தாரர்), ஜோதி M (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 07.01.2025 மொத்த நிலுவை: 07.01.2025 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை ரூ.2104974/– (ரூபாய் இருபத்தொரு லட்சத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து நான்கு மட்டும்) மற்றும் பணம் செலுத்தும் வரையிலான ஆண்டு வட்டி @14.25% உட்பட.	கையக	தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், தேனி சார்பதிவு அலுவலக வட்டாரம், தேனி அல்லிநகரம் நகராட்சி, வார்டு எண் 9, அம்பேத்கர் மத்திய தெருவைச் சேர்ந்த அயன் சர்வே எண் 670 வடக்குப் பக்கம், பரப்பளவு 4 ஏக்கர் 61 சென்ட். இதிலடங்கிய வடக்குப் பக்கத்தின் மத்திய பரப்பளவு 1512 சதுர அடி. இதில் கிழக்குப் பக்கத்தில் அடங்கிய விண்ணப்பதாருக்கு உரிமையுடைய 756 சதுர அடி (கிழக்கு–மேற்காக 18 அடி. தெற்கு வடக்காக 42 அடி) கொண்ட வீட்டு மனைச் சொத்து. இந்த வீட்டு மனைச் சொத்தில் விண்ணப்பதாரரால் கட்டப்பட்ட Rcc வீட்டுக் கட்டடம் உட்பட. இத்துடன் மின்சாரம் மற்றும் நீர்குழாய் இணைப்பு மற்றும் வழக்கமான வழிப்பாதை உரிமைகளுடன் இதன் அனைத்து வசதிகள் உட்பட. தற்போது சொத்தின் வார்டு C, பிளாக் எண் 40, நகர சர்வே எண் 94. எல்லைகள்: கிழக்கு நோக்கி: செல்லய்யா அவர்களின் வீடு, மேற்கு நோக்கி: வடக்குப் பக்கம் வேல்முருகன் சொத்து மற்றும் தெற்குப் பக்கம் பாலமுருகன் சொத்து, வடக்கு நோக்கி: கப்பய்யன் அவர்களின் வீடு, தெற்கு நோக்கி: கிழக்கு–மேற்குத் தெரு.	ரூ.2885794/– (ரூபாய் இருபத்தெட்டு லட்சத்து எண்பத்தைந்தாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று நான்கு மட்டும்)	ரூ.288579.40/– (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பத்தெட்டாயிரத்து ஐந்நூற்று எழுபத்தொன்பது மற்றும் நாற்பது பைசா மட்டும்)	24.12.2025 மாலை 5 மணிக்கு முன்பு	10,000/–	19.12.2025 (முற்பகல் 11 முதல் மாலை 4 மணி வரை)	26.12.2025 (முற்பகல் 11 முதல் பிற்பகல் 2 மணி வரை)	ஏதுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/ கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச் சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்துகொள்ள அருகில் உள்ள கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்துவரி, ம